# வாழும்கவிதை



JPL
C2034

2034

ஜீவா - ஜீவரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்
12080

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழும் கவிதை

(கவிதைத் தொகுதி)

12080

ஜீவா-ஜீவரத்தினம்

மஞ்சுளா பிரசுரம்

துறைநீலாவணை —— கல்முனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சுளா பிரசுரம்—1. முதற் பதிப்பு–சித்திரை '63.

894.811
ஜோ
12080

உரிமை ஆசிரியர்க்கு.

CLASS NO
ACC. NO
DATE OF BINDING

ஆசிர்வாதம் அச்சகம்,
32, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12080

# பொருளடக்கம்


1. கவிதையின்பம்
2. காட்சியின்பம்
3. காதலின்பம்
4. சமூகம்
5. பல்சுவைப்பாடல்கள்
6. தனிப்பாடல்கள்


KOHA JPL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்னை கருவில்நான் அவதரித்த நாள்முதலாய்
என்னை இரக்கமெனு மேணையிலே தாலாட்டி,
தன்னை ஒறுத்துத் தமியேனை ஆளாக்கி,
அணுவு மிரக்கமிலா அந்தகனின் பேய்ப்பசிக்(கு)
உணவாகிச் சென்ற உத்தமியென் பாட்டி
எமிலி நாகமுத்துவுக்கீ தர்ப்பணமே!

—ஜீவா-ஜீவரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாற்றுகவி

## "விடிவெள்ளி"

### வெண்பா

உள்ளத் துருவாய் உணர்ச்சி கருத்துமொழி
தெள்ளத் தெளிவாகச் சேர்ந்துகவி--வெள்ளமெனப்
பாய கவிஞருக்குப் பாலிக்கும் செந்தமிழென்
தாயே அருள்புலமை தந்து.

ஈழத் தமிழன்னை ஏற்றணியும் மாலைதனில்
வாழும் ஒருமலராய் வாஞ்சையுடன்--தாள்வைத்து
போற்றுகின்ற ஜீவாவின் பொற்கவிதை நூல்படித்து
சாற்றுகவி சொல்வேன் சமைத்து

### ஆசிரிய விருத்தம்

கள்ளமுதம் தீகாற்றுக் கலந்த மைத்துக்
கவிதைதந்த பாரதியின் வழியிற் செல்லும்
தெள்ளமுதக் கவிஞர்களெம் ஈழ நாட்டிற்
செப்புபல ஆயிரமாய்ச் செழிக்கு மிந்நாள்
வெள்ளமெனக் கவிதைமழை பொழிந்து மின்னும்
வித்தகர்கள் இளங்கவிஞர் இன்ப மெல்லாம்
துள்ளுதமிழ்ப் பொன்கவியால் தமிழன் னைக்குத்
தூயவணி அமைத்தணிதல் மகிழ்வு தானே.

வானமரா மீன்மகளிர் பாட, தேனுல்
வயல்நிறைய சாலிகரும் பாகும் நாட்டில்
கோனனைய கவிஞர்பிரான் விபுலா னந்தக்
கொண்டலொடு புலவர்மணி வழியிற் சென்று
ஆனமுதக் கவிதைபொழி கிழக்கி லங்கை
அளித்ததமிழ்ப் புலவர்பலர் அவருள் நல்ல
கானுயரும் வயல்வளமும் தமிழும் சேர்ந்த
கல்முனைநீ லாவணையூ ரீன்ற மோலோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபாசம் வசைதிட்டு சூது வாதால்
அன்னைதமிழ் மொழிவளர்க்க "அறிஞர்" சேர்ந்து
பாவாலும் கதைநாவல் பலவற் றாலும்
பலவேலை செய்யுமிந்தக் கற்கா லத்தில்
நாவார நெஞ்சார இனிக்கப் பாடி
நல்லகவி யமுதமழை மொழிந்து நாட்டின்
சாவான வெம்மைநிலை தணிக்கும் தூய்மை
தரும்பணிசெய் பேனைகொளும் கவிஞன் ஜீவா

ஈசனிடம் நினைவுதமிழ் நெஞ்சு பேச்சில்
இனிமைபணி வடக்கமுளோன் கலைவ ளர்க்கும்
ஆசிரியப் பணிபுரிவோன் எனது தம்பி
அறிவாலென் அண்ணனென நின்றேன் செய்த
வாசம்அழ கினிமைசுவை அமுது தேனில்
வார்த்தமைத்த கவியமுத வள்ள மீதில்
ஓசைநயம் சொற்பொருளின் தெளிவு ணர்ச்சி
உயர்ந்தகருத் தமைந்தநிலை ஓங்கி வாழ்க !

காட்சியின்பம் கவிதைஇன்பம் சமூக வாழ்வு
காதலின்பம் பலசுவைப்பா தனிப்பா வென்று
மாட்சியுற அமைத்தகவி யின்ப நூலில்
மனதினிக்க வைத்தகருத் தழகு துள்ளும்
ஆட்சியெலாம் விளக்கிடஓர் தனி நூலாகும்
அஞ்சுகிறேன் அழகையெலாம் விரிக்க, சோர்வு
வீழ்ச்சியுற வீரம்தீச் சுடராய் உள்ளில்
வீசியெழும் பாடல்சில விளங்கு மாலோ

பாடையிலே காதல் வளம் வருதல்--யாப்பு
பாட்டுவிதிப் புலவர்தமிழ்க் கின்னல் செய்தல்
ஊடிவரு மேகப்பெண் கண்ணீர் சிந்தல்
ஓடிவரும் வள்ளியினோர் துள்ளல் வேகம்
ஈடில்லா இடைமுறிதல் அறியா தந்த
இருசெப்புக் குடம் சிரித்தல்--உதிர வேட்கை
நாடுமொரு காதலெனல்--அல்லி திங்கள்
நளினமிவை யுயிர்த்துலவ வைக்கும் பாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12080



புத்தமுனி உலகிருந்தால் தமிழர்க் காகப்
பொழிந்திடுவன் கண்ணீர்என் றுரைத்தும் இன்றே
செத்திடநீ செய்யென்னைத் திருத்தா விட்டால்
தெய்வமே என்றுரைத்தும் தமிழும் மாவென்
றுருத்திடுநற் கவிசெய்து போற்றி சைத்தும்
உயர்மணியும் நறுமலரும் கோத்த மைத்தும்
எத்திசையும் தமிழ்கமழ இயற்றும் நூலுக்
கென்னாசி அன்புதரு கின்றேன் வாழ்க!

## வெண்பா

பாட்டுத் திறத்தாலே பாலித் திடுகவென
நாட்டிய சொற் பாரதியின் நல்வழியில்--ஏட்டிலுயர்
பாவிசைத்த ஜீவாவின் பண்ணிசைத்தேன் சிந்துகவி
நாவசைக்கு முள்ளம் நயந்து.

அன்பும் தமிழும் அழகும் சுவைகலந்தே
இன்பப்பா இன்னு மிசைத்திடுக--துன்பமெலாம்
நீங்கும் கயமைபல நீறாகும் நானிலமீ
தோங்கும் அருளில் உயர்ந்து

வாழ்கதமிழ் அன்னை வளர்க கவிதைவளம்
வாழ்கநம் மீழத்து வண்கலைகள்!--வாழ்கதமிழ்ப்
பாவாணர் வாழும் பதிமட்டு மாநகரும்
ஜீவாவும் வாழ்க செழித்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புக முன்.....

ஈழத் தமிழகத்தி னிலக்கிய வானகத்தே
எங்கிருந்து தோன்றியதோ இவ்வா றொருவிழிப்பு ?
புத்தகங்கள், சஞ்சிகைகள் புதிய எழுத்தாளர்
எத்தனையோ பேர்கள் ; எண்ண முடிந்திடுமோ ?
குட்டிக் கதையும், குறுநாவல், நாடகமும்
கொஞ்சு மினிமை, குலவு கவிதைகளும்
மலிந்த யுகமின்று ! மகிழ்ச்சி ; பெருமகிழ்ச்சி ;
இத்தகைய கட்டத்தில். இளைஞன் எனதுகவிப்
புத்தகத்தைக் கண்டோர் புதுமை யெனச்சொல்லார்.
ஆயினும்,
சின்ன வயதினிலே சிந்தையெனும் பீடத்தில்
அன்னைதமி ழீன்ற அழகி கவிமாது
என்னையறி யாது ஒளிவிட்டா ளென்செய்வேன் ?
அன்று முதலாய் அவளென்னை ஆட்டுவித்த
ஆட்டங்க ளெல்லாம் அரங்கேற்றிப் பின்னவற்றைக்
கூட்டாய் வெளியாக்கில் கொஞ்சு தமிழன்னை
நெஞ்சம் மகிழுமெனும் நினைவினிலே யென்கருத்தை
அஞ்சாமல் ஐயா 'ஆசீர்' அவர்களிடம்
சொன்னேன் ; மறுப்பில்லை ! துரிதமாய் வேலையெலாம்
அன்னாரே செய்வித்தார் அவருக்கென் நன்றிபல !
மேலும்,
இன்று எமக்குள் இருக்கும் கவிஞர்க்கு
வழிகாட்டி யெனத்தகுமோர் வண்மைத் தமிழ்க்கவிஞர்
'விடிவெள்ளி'; உள்ளே விளங்கும் கவிதைகளைப்
ர்த்துப் பிழைதிருத்திப் பாலாறு போலென்ன
றுகவி தந்தார் ! தமியேன் அவருக்கென்
யினைக் கூறுகிறேன். நல்ல தமிழ்க்கவிஞர்
ில் தோன்ற இரங்கும் தமிழன்னை
ம் கவிதை'யையும் வாழ்விப்பாள்...நிச்சயமே !

அன்புள்ள
ஜீவா-ஜீவரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழும் கவிதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழும் கவிதை

## 1. கவிதையின்பம்

### வரம் தர வா !

அற்றைப் புலவோர் அகமே அரியணையாய்
உற்றுத் தமிழுக் குயர்வானாய் — கொற்றவரும்
கேட்டுன்னைச் சிந்தை கிறுகிறுத்தார் ; உன்சுவையை
ஏட்டாலும் சொல்ல வியலாது — பாட்டெனவே
வாழும் கவித்தேவி, வாஞ்சையுடன் நின்தாளில்
பாழும் மனிதன் பணிகின்றேன் — நாளும்
உலகில் புதினங்கள் ஒன்றல்ல ; எங்கோ
பலமைலுக் கப்பாலே பாரை — சிலநொடியுள்
வேரோடு சாய்க்கும் விஷக்குண்டு செய்வதனால்
பேரோடு வாழ்வாம் ; பெருமையிதோ ? — யாரோடு
விண்டிதனைச் சொல்லிடுவோம் விஞ்ஞானப் போர்வைக்குள்
சண்டைசெய்த லோவிவர்கள் கொண்டபணி — மண்டை
உடைக்கும் இதனை மறந்தாலும் மண்ணில்
நடக்கு தினும்கொடுமை நாளும் — தொடக்கத்தில்
சாதியுண்டு என்று சரித்திரமே சொன்னதில்லை ;
ஓதியபேர் கூடஇது உண்டென்று — வீதியிலும்
நின்று முழக்குகிறார் ; நீதியெங்கு சென்றதுவோ
என்றே எமதுள்ளம் ஏங்குதடி ! — "இன்றேதோ
நாகரீகம் காதல் ; நடுவில் முளைவிட்ட
பூகம்பம்" என்று புகலுகிறார் — ஆகமங்கள்
கூட இதன்பெருமை கூறுவதை ஏனிந்த
மூட ரறியாது முழங்குகிறார் — பாடையிலே,
காதல் வலம்வந்தால் கண்டு மனங்குளிர்வார் ;
வேதனையில் நெஞ்செல்லாம் வேகுதடி ! — ஆதலினால்,
புன்மை ஒழித்துன் புகழ்பாடத் தேவி, நின்
வன்மை வரமீய வா !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழும் கவிதை

கற்பனை என்னுமோர் கட்டழகி -- அவள்
கண்களிற் காந்தம்பி றந்ததடா !
சொற்களால் அன்னவள் பேரெழிலை -- விண்டு
சொல்லுவ தென்பதோர் பேதைமையே !
அற்புத மாயென்னை கம்புகுந்தாள் -- அன்பு
ஆறுபெ ருகவ ணைத்துநின்றாள் ;
“பற்பல காட்சிகள் காட்டிடுவேன் -- நன்கு
பார்த்துச்சு வைத்துவ ரைக”என்றாள் !

எப்படி ? என்னவ ரைவது ? -- என்று
எண்ணுகை யில்லவள் என்னிடம்
“இப்புவி இன்தமிழ் நெஞ்சங்கள் -- படித் (து)
இன்புற நற்கவி யாத்திடு ;
எப்பொழு தாகினும் என்னிடம் -- நீ
எத்தனை காட்சியும் காணலாம் !”
செப்பிம றைந்தனள் கற்பனை -- உடன்
தேன்கவி யாக்கப்பு குந்திட்டேன் !

* * *

சிந்தையைக் கவ்வியி ழுத்திடும் -- பல
சிங்காரக் காட்சிகள் காட்டினள் ;
அந்தச்சு வைநட மாடிடத் தொகை
ஆயிர மாய்க்கவி தீட்டினேன் !
செந்தமிழ் வாழுமி டமெல்லாம் -- அவை
சென்றும ணக்கவி ரும்பினேன் !
விந்தைக்கு ரல்களெ ழும்பின -- “கவிக் (கு)
எங்கேயி லக்கணம் ?” என்றன !

மண்டையில் வானம்வி ழுந்ததோ ? -- இல்லை,
அந்தக ளுயிர் சென்றதோ ?
கண்டிட நெஞ்சம்வி ழைந்தது -- அந்தக்
காதகி கற்பனை மங்கையை !
அண்டம்பு கழுமெ னையென்றாள் -- என்னை
அண்டவு மில்லையே இன்றவள் !
கொண்டஇ கழ்ச்சியின் வேதனை -- நெஞ்சைக்
குத்திடக் கண்களை மூடினேன் !

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12080



கண்ணைப்ப றித்திடு மாடையும் -- கலை
காட்டிடு மாபர ணங்களும்.
தன்னைய ழகுப டுத்திட -- ஒரு
தையல ளென்னைநெ ருங்கினள்!
பெண்ணிவள் கற்பனை தானென்று -- ஒன்றும்
பேசாதெ ழுந்தேன்ந டந்திட;
அன்னவ ளென்னைய ழைத்தலும் -- நான்!
"யாரெ"னக் கேட்டுத்தி ரும்பினேன்.

பார்த்தன ளென்னைப் பார்வையில் -- ஏதோ
பாசமி ருக்கவு ணர்ந்திட்டேன்.
வார்த்தை சி லையென நின்றவள் -- கனி
வாயினால் பேசினள்; "இன்கவி
யாக்கும் மைந்தனே என்னைநீ -- இன்னும்
யாரென்ற றிந்திலை! பாரவர்
போற்றும்க வியன்னை நானடா -- துயர்
போக்குவேன் உன்குறை யாதுசொல்!"

இன்பம்சு ரந்தது நெஞ்சினில் -- இனி
என்ன, கவித்தாயை நோக்கினேன்;
"அன்பினு ருவமே, கல்வியைக் -- கற்று
ஆய்ந்தவர் என்கவி கண்டதும்
முன்பிலா விந்தைஇ லக்கணம் -- இதில்
முற்றும்கி டையாதே என்றனர்.
துன்பமி தாலன்றி வேறில்லை -- துணை
செய்யடி தாயே"எ னநின்றேன்!

மெல்லந கைத்தனள் அன்னையள் -- "உன்னை
மேவும்து யர்நீங்கும் என்னைப்பார்!
எல்லையில் லாதஎ ழிலினைக் -- கொண்டு
என்னைச்சி றப்பிக்கு மாடையாக!
நல்லொளி வீசுமி ழைகளை -- விழி
நன்றாகப் பாய்ச்சிநீ பார்த்திடு!
எல்லாமெ னக்குஅ ளித்தவன் --நம(து)
இந்தியப் பாரதி மைந்தனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாப்பணி, 'காரிகை' என்பவை -- கற்று
யாப்பதே நற்கவி என்பவர்
காப்பரோ என்னை ? புதல்வனே -- இவை
கண்டுநீ சற்றுங்க லங்காதே !
காப்புஉன் கைகளை நோக்கினும் -- கவி
கட்டுதொ டர்ந்துநீ ! கன்னெஞ்சர்
யாப்பணி யில்லையி லக்கணம் -- நெஞ்சில்
ஊறுமு ணர்ச்சியென் றேர்ந்திட !

* * *

கூறிம றைந்தக வித்தாயைக் -- கரம்
கூப்பித் தொ ழுதேன்ம கிழ்ச்சியால் !
ஆறெனப் பாய்ந்தவு ணர்ச்சியில் -- விழி
அப்போதி றந்தது ! அப்பாடா,
ஆறுதல் பெற்றம னத்தொடும் -- மசி
அள்ளித்தெ ளிக்கின்ற கோலொடும்
ஊறுமு ணர்ச்சிய ளித்தனைக் -- கொண்டு
ஓர்கவி பாடினேன் ; வாழ்ந்திடும் !

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கன்னி

எண்டிசையு மிவ்வுலகில் இன்ன லன்றி
இன்பமில்லை ஏழைக்கு என்றஉண்மை
கண்டுணர்ந்தேன். கவலையினை மாற்ற மார்க்கம்
கருத்துக்கு மெட்டவில்லை ; காகி தத்துத்
துண்டொன்றி லோர்கவிதை யாக்க வேயத்
துயரெல்லாம் துகள்துகளாய்ச் சிதறக் காதல்
கொண்டேனக் கவிக்கன்னி மீதே, இன்பம்
குவலயத்தி லவளைப்போற் கொடுப்பார் யாரே ?

பெற்றமுத லென்னலமே பெரிதாயெண்ணிப்
பேசரிய தியாகத்தால் பேணி யென்னைப்
பற்றியிழுத் தேசிகையை வாரி விட்டுப்
பாசத்தி னூல்முத்த மீந்து "கல்வி
கற்றுவா பள்ளிபோய்" என்ற மாதா
கவினுருவைக் கண்முன்னே கொண்டு வந்து
உற்றதுயர் போக்கியுளச் சாந்தி யீந்தாள்
ஒப்பற்ற செந்தமிழ்த்தேன் கவிதைக் கன்னி !

கன்னியெழில் பொன்னுடலைத் தீண்டக் கண்கள்
கவிபாடக் கனியிதழ்கள் சிந்தும் செந்தேன்
உண்ணற்குக் கொடுக்கவரு மொயிலா ளர்க
ஓடிவந்து என்னுக்கை தழுவி மின்னும்
கன்னத்தைக் காட்டியதி களிப்பை யூட்டிக்
கவலையினைப் போக்கிமனம் தேறச் செய்தாள்
கன்னல்சுவை மேவிடுமெம் கவிஞர் செல்வக்
கவிக்கன்னி அவள்மாண்பு வியக்கின் றேனே !

சோலையிலே வீசிவிளை யாடி வந்து
சுகமூட்டும் சொகுசான தென்ற லாக
காலையிலே காசினிக்குப் பொன்மை கூட்டிக்
கங்குலினைச் சங்கரிக்கும் கதிரோ னாக
நீலவிசும் பிடைமின்னும் தாரைக் கூட்டம்
நடமாட, நகைமுகத்தோ டுலவு கின்ற
மாலைமதி யாய்வந்தென் மனதிற் கேநல்
மகிழ்வுத்தே னூற்றிட்டாள் கவிதைக் கன்னி !

(விவேகி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைத் தொண்டு

மதுவுண்பார், அதுதானே இன்பமென்பார்,
மங்கையரின் மலருடலே தஞ்சமென்பார்
எதுஇன்பம் என்றுணரா இவர்களுக்கு
இனியதொரு பாதையினைக் காட்டியங்கே
'புதுவாழ்வு காணுங்கள்' என்று கூறும்
பொன்னன கவிதைகளைத் தீட்டி, மக்கள்
பொதுமேடை எங்கணுமே யுலவவைப்பீர்,
புலவர்களே இதுவன்றோ பெரியதொண்டு ?

ஒட்டுதற்கு மொருகுடிசை யற்று, சாலை
ஓரத்திலே நின்று உதிரக் கண்ணீர்
கொட்டியுளம் குமுறிடுவோர் துன்பம் நீங்க,
கோலெடுத்துக் குன்றாத பொருளைச் சேர்த்துக்
கட்டுவீர் கவிதைகளை ! எவரும் கண்டு
களிமேவப் பொதுநலமே செய்ய வெண்ணி
இட்டமுட னேகிடுவார், இன்னல் மாயும் ;
இதுவன்றோ தொண்டுகளுள் இனிய தொண்டு ?

அங்கத்தை யாதவனின் வேல்கள்குத்த,
அயராது நாளெல்லாம் வேலைசெய்து
பொங்குமுளத் தோடில்லம் செல்லுகின்ற
பாட்டாளி பலனேதும் கண்டானில்லை !
இங்கிவனின் ரத்தத்தில் இன்பம் துய்க்கும்
இழிகுணத்து முதலாளிப் பேய்கள் வீழச்
சிங்கநிகர் செந்தமிழிற் சிலகவிதை
தீட்டிடுவீர், இதுவன்றோ சிறந்ததொண்டு ?

(கலைமதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன்னை நினைக்கையிலே !

அன்னமொ ருபிடி யை -- கையில்
ஆவலு டனெடுப் பேன்,
உண்ணமு டியாது -- அடியே,
உன்னைநி னைக்கையி லே !

சோதனைக் காகவெ னும் -- படிக்க
சோம்பலை ஓட்டிடு வேன்.
ஓதமு டியா து -- அடியே,
உன்னைநி னைக்கையி லே !

நெஞ்சிலு ணர்ச்சியெ னும் -- கொடிய
நெருப்பை மூட்டிவிட் டு,
ஒண்சமர் கண்களி ஞல் -- கொல்லுவாய்
உன்னைநி னைக்கையி லே !

சேரநன் ஞட்டிள வல் -- இளங்கோ
செய்தசி லப்புள னும்
ஆரம ணிந்துநெஞ் சில் -- நடப்பாய்
உன்னைநி னைக்கையி லே !

கம்பனும், பாரதி யும் -- அளித்த
கலையு டுத்தியென் முன்
உம்பரு லகத்த ளாய் -- ஆடுவாய்
உன்னைநி னைக்கையி லே !

கருத்தைக் கொள்ளையி டும் -- கலைசெறி
கவிதைப் பெண்ணடி நீ ;
உரித்தெ னக்கா வாய் -- அடியே,
உன்னைநி னைக்கையி லே !

(கலைச்செல்வி)



...ர் வீதி இளை நூலகம்
யாழ்... சபை
யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. காட்சியின்பம்

## காலை மலர்ந்தது

காலச்சு ழலெனும் காரிகை தன்முதல்
வேலைமு டிக்கக்க ரமெடுத்தாள்--அதி
காலை மணியிலொ லிகொடுத்தாள்--நல்ல

கோலந்த ருகுள நீரது தன்குளிர்
கொஞ்சுமு டலைச்சி லிர்க்க விட்டாள்--விழி
துஞ்சுங்க திரையெ ழுப்பி விட்டாள் !

செக்கர்வான் வீதியிற் செல்லவி ரைவெனச்
செங்கதிர் தோன்றி வெளியில் நின்றான்--காலைக்
கங்குலைத் தன்புயத் தாலே கொன்றான்--கவின்

மிக்குகு ளத்துநீர் மின்னிடப் பொன்னென
மெல்லொளி வீசியு தவிதந்தான்--தன்
பல் லெழில் காட்டிந கைத்து வந்தான் ;

முந்தைத்தி னமந்தி வேளைம னத்திடை
மோகத்தை மூட்டிப்பின் சென்றவனை--மன
வேகத்தை யூட்டியே கொன்றவனை--கண்டு

சிந்தைபூ ரிக்கச்செந் தாமரைக் காதலி
செவ்வத ரங்கள்தி றந்தனள்--அடா,
இவ்வுல கிற்கெழில் தந்தனள் !

(விவேகி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை அன்னையின் எழில் நடனம்

செம்மை படருதடா—செகம்
சீரைப் பெறுகுதடா,
வெம்மைக் கதிரவன்தன்—வீடிருந்து
வேலைக்கெ ழுந்தானடா!

அன்பன் வரவு கண்டு—அதோ
அழகுத் தாமரைகள்
இன்பமே துய்க்குதடா—விரிந்து
எழிலைக் கொட்டுதடா!

ஆதவனை மறைக்க—அலைவது
அத்தனை மேகங்களோ?
பாதகமில்லை; மழை—பொழிந்து
பாரிற் பரவுதடா!

பச்சைத் தழைகளெல்லாம்—தென்றலில்
ஆடிக் களித்தல்கண்டு
இச்சையுண் டாகுதடா—இதயத்தில்
இன்பம் சுரக்குதடா!

அந்தியி ருள்கிழித்து—ஒளிவிட
அம்புலி வந்தவுடன்,
சிந்துத டாமுறுவல்—அல்லிகள்,
சிங்காரக் காட்சியடா!

எத்தனை யோவினிய—காட்சிகளின்
இல்லம டாஉலகம்,
இத்தனை யும்மியற்கை—அன்னையின்
எழில் நடனமடா!

(ஆனந்த சாகரம்)

20340 ℃

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலவு பாரடி. ..!

(அம்புலி மாமா வா... எ. மெ.)

நீல விசும்பிடையே--நிலவு
நீந்திக் களிக்கிறதே,
ஞாலத்து மக்களுக்கு--நல்லொளி
நல்குது பாரடி நீ......!

சுந்தரத் தாரகைகள்--எத்தனையோ
சுற்றி வர மின்ன,
அந்தரத்தே நின்றே--சுடரொளி
அள்ளி வழங்குது பார்......!

மாலைக் கதிரவன் தன்--மனைசெல்ல
மையிருள் சூழுகையில்
வேலைப் பிடித்தது போல்--இருளதை
வெட்டும் நிலவினைப் பார்......!

ஆழ் குளத்தே முளைத்த--அழகுறு
அல்லியின் மொட்டுக்களை,
வாழ்விக்க வந்த வட்ட--நிலவினை
வந்து நீ பாரடியே......!

--நீல் விசும்......!

(சுதந்திரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர்

ஏனிந்தச் சோகமடி மேகப் பெண்ணே ;
எவருன்னை வைதார்கள் ? எல்லை யற்ற
வானன்றோ நீவாழும் வீடு ? அங்கு
வருதற்கு மோர்குறைதான் உண்டோ ? இந்த
மானிலத்தில் தான்வஞ்சம், சூது கொள்ளை
வாழ்கின்ற துண்மை ; எனில் மக்க ளில்லா
வானத்திற் கெவர்வந்தார் ? வஞ்சி யே, உன்
வாட்டத்தின் காரணம்தான் புரிய வில்லை !

* * *

ஓடோடி வானத்தில் ஓய்வில் லாது
உலவியதால் கால்கள்தரும் வலியா ? இல்லை,
ஈடேது மில்லாது ஓங்கி நிற்கும்
இருண்மலைகள் மீதிடறி வீழ்ந்த நோவா ?
நாடாத குளிர்காற்று இன்று உன்னை
நண்ணியதா லுண்டான நடுக்கமா ? பல்
கோடானு கோடியெழில் கொண்ட பெண்ணே
குறையென்ன வந்ததடி ? கூறு வாயே !

* * *

வெண்பஞ்சுக் கற்றையெனும் வதனம் என்ன
விசனத்தி லிருண்டதடி விபரம் கேட்டால்
கண்ணீரேன் சிந்துகிறாய் ? கவலை யில்லை,
காக்கட்டு முலகையது ! கண்ணே, வெந்து
புண்ணான உன்னெஞ்சை இன்னு மின்னும்
புரியாது கொல்லுவது முறையே யல்ல!
தன்னாலே அழுதது சாந்தி மொள்ளல்
தப்பென்று சொல்வேனோ ? சரி, உன் பாடு !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. காதலின்பம்

## வள்ளி வருவதேன் ?

துள்ளுங் கவின், மயல் கொள்ளும் விழியுடை
வள்ளியென் னில்லம் வருவதேன் ?—இளம்,
வள்ளியென் னில்லம் வருவதேன் ?—அவள்
கிள்ளை மொழியினைக் கேட்டென் னகத்திடைக்
கட்டிக் கருப்பெலாஞ் சாய்வதேன் ?—அந்தக்,
கட்டிக் கருப்பெலாஞ் சாய்வதேன் ? துள்ளுங்...

''வட்ட முகத்திடை
சொட்டுங் களையிட்டுக்
கட்டுகவி'' யெனச் சாற்றவோ?—இல்லை
கிட்டேவந் தென்னுடல்
தொட்டு மனத்திலே
மட்டில்லா இன்னமு தூற்றவோ ? துள்ளுங்...

அஞ்சனக் கூந்த
லழகினைக் காட்டியென்
நெஞ்சத்தே பாசத்தை வீசவோ—இல்லை
கொஞ்சு மினிமைக்
குரலினு லென்னெடு
கெஞ்சிக் காதல்மொழி பேசவோ ? துள்ளுங்...

முல்லை மலரூட்டும்
மோகத்தைப் போன்றவள்
பல்லி னெழிலினைக் காட்டவோ ?—இல்லை
அல்லி யரும்பினைப்
போல வழ கொளிர்
'கொல்லுமிரு குமிழ்' நீட்டவோ ? துள்ளுங்...

---

(வீரகேசரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாய மோகினி

ஆழ்துயி லில்லசைந் தாடிவந் தவொரு
நீள்குழ லாளினு ருவங்கண் டேன், கரு
நீள்குழ லாளினு ருவங்கண்டேன்--உளம்
மூழ்கிடப் போதையில், கீழ்நிலன் நோக்கிய
வாள்விழி கண்டுயிர்க் காதல்கொண் டேனவள்
வாள்விழி கண்டுயிர்க் காதல் கொண்டேன்!

வெள்ளிசி ரிக்கும்வி சும்பிநின் றேயொளி
அள்ளியி றைக்கும்ம தியினை --முகம்
எள்ளிந கைத்திட, என்னுடல் தீண்டலும்
துள்ளியெ ழுந்தேன்வி ரைவென !

பஞ்செனன மென்கரப் பாவனை யாலெனைக்
கொஞ்சம்வ ரும்படி சுட்டினுள்--மோகம்
மிஞ்சிவ தைத்திட, மீள்வழி காணுது
அஞ்சுகம் பின்னடை கட்டினேன்!

மெல்லிய காற்றுளம் மேனித ழுவிட
அல்லிக்கு ளத்தண்டை நாடினேம்--அவள்
ஒல்லியு டலையு ணர்ச்சிந னிபாய
அள்ளினேன் ; வெள்ளிகள் நாணின !

கட்டிய ணைத்தவள் கன்னமுண் டேனிரு
மொட்டுக்கள் மார்பினைக் குத்திட--அந்த
வட்டமு கத்தாள்ம றைந்தாள்சி றிது பின்
கட்டிலில் என்மனம் செத்திட!

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள் நினைவு

காதடைக்கு மோசையுடன் காற்றைக்கீறி
காரிருளி லோடுகின்ற கரியுண்வண்டி
சேதமெதும் விளையாது நாளைவீடு
சேர்த்துவிடும் பாரத்தை ஏற்றவாறு
கீதமதற்(கு) ஊதலெனும் பெருமையோடு
கிழக்குமுக மாய்நகர விழியிரண்டும்
பாதையிரு மருங்கினுறு காட்சியெல்லாம்
பார்த்திடினு மங்குமனம் பதியவில்லை !

பின்னோக்கி நடைபயிலும் சிந்தனைத்தேர்
பிடித்தென்னைத் தன்மீது சுமந்துகொண்டு
தன்பாட்டில் செல்லுவது மேதோவுள்ளச்
சாந்திக்கா ? இல்லையிலை !! இருண்டவானில்
விண்மதிதான் தோன்றியதா ? அதற்குமுண்டோ
மின்னலெனும் பல்வரிசை ? ஆமாம், மாலை
கன்னல்குழைத் தெனக்குவிடை தந்துசென்ற
கயல்விழிதான் நகையொலியி னோடுநின்றாள் !

மாயமிது தானென்ன ; மனதில்வாழும்
மங்கையிவள் வந்தவழி யென்னவென்று
ஆயமன மெண்ணுகையில், "அத்தான் நீங்கள்
அப்படியே சிலையான தென்ன ?" வென்றாள் ;
"நீயிங்கு வந்தவழி...?" யென்றேன் "எந்தன்
நினைவன்றோ நீங்க"ளென்றாள்! அணைத்துக்கொள்ள
பாயவென திருகையும் முடியவில்லை ;
பலகணியின் கண்ணாடிக் கென்னகோபம் ?

(விவேகி)

12080

# எங்கும் நிறைந்தவள் !

ஏட்டைப்பு ரட்டியோர் பாட்டைப்ப டித்திடில்
ஏக்கம் ம றந்திடலாம் -- மனத்
தாக்கங்கு றைந்திடலாம் -- வெறி
மூட்டுங்க லைதவழ் முல்லைமு றுவலின்
மோகம்வி லகிடலாம் -- மனத்
தாபங்கு றைவுறலாம் -- எனச்
'கூட்டொடு கூடாய்'த்து ரிதந டையினில்
சென்றென்ன றையமர்ந்து -- நூல்
ஒன்றினை யேதிறந்து -- விழி
ஓட்டலும் நெஞ்சிலு றைந்தவ ளேயந்த
ஒற்றைக ளில்நிறைந்தாள் -- என்னிடம்
'கற்றவை' கள்ளறைந்தாள் !

நெஞ்சுவி ழைந்திடும் நிம்மதி யைப்பெற
நீலக்க டலருகில் -- ஒரு
கோலப்ப டகருகில் -- இது
வஞ்சியா தென்றிட்ட வாறமர்ந் தேயந்த
வண்ணத்தில் மூழ்கிடலும் -- என்
கண்ணெதிர் ஆழ்கடலும் -- தன்
பஞ்சுக்க ரங்களை நீட்டி நெ டுவானைப்
பாய்ந்தெழுந் தேயழைக்க -- என்
காய்ந்தவெண் ணந்தளிர்க்க -- இனித்
தஞ்சமி லையெனத் தாவிந டக்கையில்
தங்கமே முன்னடந்தாள் -- உல (கு)
எங்குமி வள்நிறைந்தாள் !

(விவேகி)

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருவாரோ ?

காதலரின் கைபட்ட போதில் என்றன்
கன்னத்தி லவர்காணும் வண்ணம் காட்டும்
மாதிரியில் ''பளபள''க்கும் மாலை வானம்
மண்ணுக்குச் செம்மைதர மலரை யெல்லாம்
மோதிவர மென்காற்று, முட்டி யார்த்து
முத்தமிடக் கரையையலை, மோக மாகி
வேதனையிற் சாகின்றேன் ; ''வருவன் ஓடி
விரைவினிலே'' யென்றவர்தான் வருவ தெப்போ ?

புதுமணப்பெண் சிந்தையினைப் போலும், அல்லி
புன்னகையிற் பூரிக்க, புதர்க ளெல்லாம்
மதுவுண்ணுங் கருவண்டி னிசையி லாட,
மரக்கிளையி லாங்கேயோர் பறவைச் சோடி
இதயத்தை யிதயத்தோ டொன்ற வைத்தே
இன்பத்துள் மூழ்க,என திளமை நெஞ்சம்
சிதைவுற்று மாய்கின்றேன் ; சிந்தை கொண்டு
சென்றவர்தான் வருவாரோ, சாகுமுன்னே ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞன் அழைப்பு

நிதமும் உன தெழிலென்
நினைவில் அலை மோத,
மிதமிஞ் சுதுமோகம்
மீளும் வழி காணேன் !
அதரத் திடை யூறும்
அமுதத் தேன் சாறும்
இதயத் தொரு இடமும்,
ஈந்தாற் குறை யோடீ ?

கவிதை மலர்க் காவென்
களிநல் கிடு நயமே,
புவியில் ஒரு பெருமை,
பெறினும் இதற் கீடோ ?
குவியா நிதி யெனினும்
குறையா பெரு வளமே,
கவியென் னுடன் இனிதே
காண்பாய் சுகம் வாராய்!

ஏழ்மைக் கட லேலென்
இல்ல மெனி லாங்கே
வாழ்வைத் துயர் மேவா
வற்று பெரு வளமே,
சூழ்வைத் துயிர்வாழ்வோர்
கொள்ளும் பெரு இன்பம்
தாழ்வைத் தரு மென்றால்
தவறே யுன தெண்ணம் !

பட்டா லுடல் போர்த்துப்
பழகா விடி லென்ன,
கெட்டோ விடும் மானம்
கிழிசல் உடை கட்டில் ?
ஒட்டக் குடி லற்றோர்
உறையும் "மர நீழல்
கொட்டும் பெரு சாந்தி
கொள் வோமதை வாராய்!

அங்கத் தொரு பகுதி--
அதனைப் பிறர் காணச்
சங்கை யினை யோட்டி
சரசம் புரி கின்ற
மங்கை யவராலுன்
மானம் பறி போகும்
இங்கென் னுடன் வருகில்
ஏதம் உனை அணுகா !

இரவில் ஒளிர் மதியும்,
இமை கொட்டிடு மீனும்,
தரணிக் கொளி கூட்டும்
தங்கக் கதி ரோனும்
இரவா மலே புரவும்
இன்பம் ; அதை யுண்ண
நறை சொட்டிடு மொழியே
நாணு துடன் வாராய் !

(விவேகி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்தி எங்கே?

தினமவ ளெழிலுரு மனமெனும்
திரையினிற் படமென நிழலிட,
அனலிடை யுருகிடு மெழுகுபோல்
அமைதியை நாடுது நெஞ்சமே!
புனல்சொரி விழியொடு, புன்னகை
புரியினு மிருஇதழ், 'கரகர'
எனுமொலி செவிவர, "வருகபோய்"
என்றவள் விடைதுயர் கொஞ்சுதே!

இரைகடற் கரைசெலின் இனியவள்
ஈந்திடும் சஞ்சலம் போமென,
விரைகலும் வெண்மதிப் பெண்ஒளி
வீசிட வான்மிசைத் தோன்றினள்!
'வரிசிலை விழிமுகம் இது' எனும்
வார்த்தையை வாய்வெளி சிந்திட,
திரையெறி கடலினை நோக்கினேன்
தேன்மொழி குழலினைப் போன்றதே!

அணுவெனும் சாந்தியங் கிலை; மலர்
அசைவனம் நல்கிடும் மகிழ்வினை
உணுமிலக் கோடுசென் றமர்தலும்
உடலினைத் தென்றலாட் கொண்டது!
கணத்தினிற் 'கீச்' ஒலி கேட்க, என்
கண்கள்மேற் சென்றன; அங்குதன்
இணையொடு பறவையொன் றின்புறும்
எழிலினைக் கண்டுளம் வெந்தது!

கடுகதிப் புகைரதம் போலிரு
கால்களென் குடிசையுட் பாவின!
படுதுயர் போக்கிடும் மூலிகை
பயன்செறி தமிழிலக் கியமென,
எடுத்தொரு நூலினைப் புரட்டிட
எண்ணரும் தலைவனும், தலைவியும்
சுடுபிரி வாலுளம் வாடினர்,
சுகமெனும் சாந்தியெங் குள்ளதோ?

(ஆனந்தசாகரம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ்க்கவி தந்தவள்

வட்டம தியினை வெட்டிக்கு ழைத்தொரு
வண்ணமு கம்படைத்து ; அங்கு
சுட்டும்வி ழியெனச் சொல்லுவ தற்கிரு
சோதிக்க யல்பொருத்தி ; அதை
விட்டக லாதவி தத்தில்பு ருவத்தை
வில்லென வேவளைத்து ; மனத்
தட்டினை வீடெனக் கட்டிவ சிப்பவள்
தந்தாள்த மிழ்க் கவிதை !

சொட்டுங்கு ருதியுள் தோய்த்திரு துண்டினைச்
சொக்குமி தழ்சமைத்து ; அதை
வெட்டிடி லுள்ளேமி ளிர்ந்துவி ழிகொள
வெண்ணிறச் சோறடுக்கி ; முகம்
தொட்டிட மேனியைத் தோள்கள்ந டுவொரு
சங்கைக்கொடு பொருத்தி ; மனத்
தட்டினை வீடெனக் கட்டிவ சிப்பவள்
தந்தாள்த மிழ்க் கவிதை !

பட்டுத்து கிலினைத் தட்டிப்பொ டிசெய்து
பாங்குட லைச்சமைத்து ; கூர்
மொட்டுக்க ளையரு காகவி ணைத்திரு
மோகன மார்பமைத்து ; எனைக்
கட்டிய ணைக்குங்க ரங்களை மெல்லிய
காந்தளி லுற்படைத்து ; மனத்
தட்டினை வீடெனக் கட்டிவ சிப்பவள்
தந்தாள்த மிழ்க் கவிதை !

(வீரகேசரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த எண்ணம்......

கன்னங்க ரேலெனும் வன்னவ ளையல்கள்
கையில்க லகலக்கும் -- விழி
மையுள்கு றுகுறுக்கும் -- ஒரு
சின்னவி டையிறும் சேதிய றியாது
செப்புக்கு டம் சிரிக்கும் -- வாய்
சாப்பிட வேயினிக்கும் -- படி
கன்னல்கு ழைத்துமி னுக்கிய தாமெனும்
கள்ளியி தழ்துடிக்கும் -- உயிர்
அள்ளிவைத் தேகுடிக்கும் -- அந்த
மின்னலெ னும்திரு நாட்கள்ம றைந்திருப்போ
நெஞ்சம்ம கிழ்விழக்கும் -- ஒரு
தஞ்சம்வ ரமறுக்கும் !

கொப்பிலி சைபயில் கோகிலம் நாணிடக்
கொஞ்சுங்கு ரல்பிறக்கும் -- உடன்
அஞ்சும் செயலிழக்கும் -- அவள்
கைப்புது மென்மலர் கட்டியணைத்திடக்
கண்களி மைதிறக்கும் -- அங்கு
பண்கள்ப லபிறக்கும் -- அந்த
ஒப்பரு நாட்கள் ஒழிந்தும றைந்திருப்போ (து)
உள்ளம்ம கிழ்விழக்கும் -- விழி
வெள்ளமெ னப்பெருக்கும் -- உயிர்
இப்புவி மீதுயி ருக்கும்வ ரையிந்த
எண்ணமெ னையுருக்கும் -- அவள்
வண்ணம்நி னைவிருக்கும் !

12080

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏனிந்தக் காதல்!

வண்ணத் தமிழில் வரைந்து எனக்கிட்ட
எண்ணச் சிதறலினை இன்றுகண்டேன்

கண்ணனையாய்,

நெஞ்சிற் குடியிருக்கும் நின்னுருவை நான்மறந்து
துஞ்சுவனோ ? இல்லையடி ! சொல்குறையும்

அஞ்சலொன்று

அட்டியின்றி யுன்னை யடையாது செய்ததுவோ ?
கட்டிக் கரும்பே, கவலையிலை,

எட்டாத

தூரத்தில் நானென்றோ சூடான வார்த்தைகளைச்
சூரத் தனமாய்ச் சொருகினாய் ?

பாரக்

கரிகுழலி, நீயோர் கணமேனு மென்னைப்
பிரியாது வாழ்கின்ற சேதி

புரியாது

இன்னு மிருப்பாயேல் ஏனிந்தக் காதல் ? நீ
பன்னுவதி லுண்டோ பலன் ?

(தினகரன்)

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கன்னத்தில் ஒன்று...!

கற்பனை யென்னுங்க டலிற்கு ளித்தொரு
காவியம் செய்துவந்தேன்--அதில்
அற்புத மானபல் லாயிரம் தத்துவம்
ஆழப்ப தித்திருந்தேன்--அந்தப்
பொற்பது மையென்பு லமையில் சொக்கியே
போற்றுவ ளென்றிருந்தேன் -கொண்டு
விற்பனை செய்யுங்கள் வாங்குமு லகென
வீசியெ றிந்துவிட்டாள் !

காதைக்க டித்திடும் கண்களி சைப்பதும்
காவியம் தானேயென்றேன்--உங்கள்
போதைமொ ழியினிப் போதும் ; தமிழுக்கும்
போடுங்கள் மாலையென்றாள்--அடா,
கீதமோ நானிங்கு கேட்பது, இல்லையுன்
கிள்ளைமொ ழியோவென்றேன்--இந்தச்
சூதுமெ தற்குங்கள் சொற்கள்த மிழெனும்
சூழ்ச்சிக்கா ரிக்கேயென்றாள் !

அன்னைத்த மிழுக்கு ஆபர ணம்தர
ஆக்கினு யென்னையென்றேன்--ஐயோ,
என்னகொ டுமையீ தென்றிட்ட வாறவள்
எட்டிந டந்துசென்றாள்--நெடும்
பின்னலைப் பற்றியி ழுத்தேன்க ரங்களுள்
பேசாது சாய்ந்து விட்டாள்--பழக்
கன்னத்தி லொன்றுகொ டுத்தபின் தானந்தக்
கள்ளிசி ரிப்புதிர்த்தாள் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. சமூகம்

## உதிர வேட்கை

செய்யாத குற்றமெது செய்தே னென்று
சினக்கின்றாய் பெண்ணேநீ ? திருமு கத்தில்
வையாத வாறெல்லாம் வைதாய் ; பாவம்,
வார்த்தைக்கும் வண்டமிழில் பஞ்ச காலம் !
மெய்யாகச் சொல்லுகிறேன் நம்பு ; வேலை
மிகுதியினால் மடல்வரைய முடிய வில்லை ;
ஓய்யார வாழ்வுமகிழ் 'உயர்ந்தோர்க்' கன்றோ
ஓய்வுண்டு ! உழைப்பாளி யெனக்கு முண்டோ ?

'படியளக்குந் தெய்வத்தை' வஞ்சித் தேதான்
பதுக்கியிதை எழுதுகிறேன் ; பார்த்து விட்டால்
கடிப்பொழுதில் கணக்கெல்லாம் தீர்த்து விட்டுக்
"கதவங்கே" யென்றிடுவார் ; கவலை யில்லை !
நடிக்கின்ற மேடையிதா முலக மீது
நாளொருவன் வாழவிட மில்லை யென்றால்
அடிக்கின்ற காற்றோடு காற்றாய்ச் செல்லும்
அற்பமெனுந் துரும்புக்கு மிடமே யில்லை !

வற்றியநீ ரோடையிலே வாழ்வு தேடி
வருந்துமொரு மீன்போல, வானை நோக்கி
முற்றியநெற் பயிர்மழையைக் கோரி — நீண்ட
மூச்செறிதல் போலுமுன துள்ள மென்னைச்
சுற்றுவதால் துயர்மீறித் துடித்த சேதி
சொல்லுமடல் மிகநன்று ! சொக்க வைக்கும்
கற்பனையும் கனிச்சாறு ! ஆனால், துன்பம்
காதலினா லெனச்சொல்லி னெப்புவேனோ ?

வாழ்வை,யத னிலக்கணத்தை மாற்று தற்கு
மாய்மால மெதும்புரிய வில்லை ; சொன்னால்
தாழ்வாக எடையிடுவாய் ; "தம்பி யென்னைத்
தட்டி—யலைக் கழிக்கின்றார்" என்று ! ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள்மலரும் நானுன்னை மணக்க வென்ற
நம்பிக்கை யுள்ளதனுல் எனது நெஞ்சின்
ஆழ்தளத்தி லுள்ளதனைச் சொல்லுதற்கும்
அஞ்சுவனோ ? ஆகையினுல் அப்பாற் செல்லு !

வேளைதவ றுதூட்டு மன்னை கூட
விலகிடுவாள் கடமையிலோர் வேளை; ஆனுல்.
ஏழைமுது பாட்டியவள் எந்தன் வீட்டு
எதிர்ப்பக்க முறைகின்ருள் ; என்னை யெந்த
நாளையிலுங் காணுது போகாள், பெற்ற
நம்பியெனக் கொள்கின்ருள் ; நானு மன்புச்
சூளையினில் வேகின்றேன் ; தோற்கி ழத்தில்
'தொல்காதல்' சற்றுமெனக் கில்லை ! யில்லை !!

இளமைதரு நோய்க்கொடுமை யாற்றி டாது
ஏங்கிடுமிந் நிலையினிலே தோல்வி ழுந்த
கிழமொன்றை மணவென்று லொப்பு வாயோ ?
கிளர்போதை தெளிவிக்கு மாற்ற ல்ந்தப்
'பழ'த்திற்கு முண்டாமோ ? பார்க்கின் 'காதல்'
பருவவிதை சிருஷ்டித்த விருட்ச மன்றே ?
அழகென்னும் போர்வையதை யோங்க வைக்க
ஆகுமொரு பசளையெனில் அர்த்த மென்பேன் !

உனிலொன்றுந் தவறில்லை ; உலகு வாழ்ந்த
ஒருகோடிக் கவிகளுந்தான் உணர்ச்சி மீறி
மனுவியல்புக் கப்பாலுஞ் சென்று, மண்ணை
மங்கையெனக் கற்பித்து மன்ன னுகக்
குனிவிண்ணைச் சொன்னுர்கள் ! கொடிய போதை
கொன்றதனு லினுஞ்சற்று முன்னே சென்று
'அநியாயம்' சொன்னுர்கள் ; பாவம் வண்டு
அரும்பசியை ஆற்றற்கும் மார்க்க மில்லை !

வாழையடி வாழையென வந்த காதல்
வழக்கத்தி லூறியதால் வெம்மை கக்கும்
சூளையிடை மண்பாண்ட மாகி விட்டாய் ;
சொல்லுமொழி யேற்கின்ற நிலையி ருந்தால்
மூளையிலே பட்டதனை யெழுது கின்றேன்
மோகமதா லுன்மீது இல்லை யென்ருல்,
நாளையொரு வேளைவரும் நம்ப வைக்க
நானுன்மேல் கொண்டபெரு மாழி யன்பை !

* * *

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பருவத்தின் கைவரிசை மேனி யெல்லாம்
பரிணமிக்கும் பெண்தான் நீ! பருகி டற்கு
உருகுபவன் நான்; உண்மை! என்னை முன்னர்
உணராயேல் நீயுருகு மாண்மை யின்று
இருக்காதோ வேறிடத்தில்; இவ்வா றுனல்,
ஏதர்த்தம் காதலுக்கு? இளமை செய்த
குறும்பில்தா னெமதன்பி னுள்ள மென்று
கொள்ளற்கு வெட்கமெதுந் தேவை யில்லை!

நரையுருவுக் கில்லாத சக்தி யென்போல்
நலமான வாலிபருக் குள்ள தென்று
அறியாத சிறுபிள்ளை யல்ல நீ! யென்
அன்பழியுங் காலையிலுன் வாழ்வு மீளப்
புரியாயோ மணம்வேறு? "பொய்பொய்" என்று
பொறுக்காது இறுதியினைத் தேடிக் கொண்டால்
பொருளற்ற காதலினைப் புவியோர் நம்பப்
போடுமொரு வேடமெனப் புகல வஞ்சேன்!

மண்மீது வாழ்வுணரா மக்கள் 'செய்யும்
வாழ்க்கைக்கு மெமக்குமெதும் பேத மற்ற
கண்மூடிக் கொள்கையிது என்பா யானல்
கட்டுகளை மீறியதோ நமது வாழ்க்கை?
விண்கூரை யாகுமவை 'காதல் செய்யும்'
வீட்டிற்கு! வியனுலகில் நமது "காதல்"
கண்தெரியாக் கங்குலெனும் போர்வையுள்ளே!
காண்கின்ற பேதமினி வேறு முண்டோ?

செகமீது செனித்திட்ட வுயிர்க ளெல்லாம்
சிருஷ்டிக்கத் துடிக்கின்ற வேக மேநீ
புகல்கின்ற 'மெய்க்காதல்'; பொறுமையோடு
போட்டுப்பார் சிந்தையினில் புரியும்! வீணே
மிகநொந்து வாடுவதும், மேனி கூட
மெலிவதுவும் நமதுதிர வேட்கையென்து
அகஞ்சொன்ன போதுமினிக் காத லென்று
அவ்வுணர்வுக் கேன்மகுடம் புனைய வேண்டும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் படைத்தாய் இறைவா?

கன்னியெ ழில்தவழ் கட்டுடலம் -- அதைக்
கண்டவர் நெஞ்சம்ம டிந்துவிடும்,
பொன்னின்சி லையவள் பூப்படைந்து -- தினம்
போந்தன பற்பல நூறுகளாய்!

பட்டுடல் தூக்கிடும் பொன்னகைகள் -- அந்தப்
பாவையி துவரை பார்த்ததில்லை,
கட்டிடக் கந்தைக ளொன்றிரண்டே -- அன்றிக்
கண்டிலள் வாழ்விலு யர்துணிகள்!

பாதியு டலையே மூடிவைக்கும் -- கெட்ட
பண்புடை மங்கையர் வாழுமிந்த
மேதினி மீதுபெண் சோதியவள் -- முழு
மேனியும் பேணிடும் 'சாதியினள்!'

சாந்தமு றுமுக வட்டத்திலே -- துயர்
சாயலைக் காட்டிடும் ரேகையொன்று
சேர்ந்திருக் கும்மதைக் கண்டதுமே -- தந்தை
செல்லுவா ரோர்புறம் சிந்தனையில்!

மங்கலொ ளிபடர் மாலையிலே -- அந்த
மங்கையைத் தீண்டுங்கு ளிர்காற்றும்,
கங்குல்கி ழிக்குமொ ளிமதியும் -- கொல்லக்
கண்ணீரொ டுசுடு மூச்செறிவாள்!

மங்கையு றுதுயர் போக்கிடற்கு -- உயர்
மாமருந் தாமொரு மாப்பிள்ளைக்கு,
எங்கும லைந்துத ளர்ந்துவிட்டார் -- தந்தை
ஏங்கியு டலும்மெ லிந்துவிட்டார்!

பேசிய மாப்பிள்ளை வந்திடலும் -- பார்த்துப்
"பெண்சரி" யென்று இழித்திடலும்,
காசுந கையில்லை என்றதுமே -- அவர்
கம்பியை நீட்டலும் கன்னிகண்டாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப்பொரு ளில்லாரு தரத்திலே -- இந்தக்
காரிகைப் பேருெரு சாபமெனும்
'மெய்ப்பொருள்' கண்டுவு ணர்ந்துகொண்டாள் -- இந்த
மேதினி யோர்செய லெண்ணிநொந்தாள்!

பெற்றபி றவியிற் பெற்றதுயர் -- அவள்
பிஞ்சும னதைப்பி ழிந்திடவும்,
பெற்றவர் பாரம்கு றைத்திடவோ -- அந்தப்
பேதையி ரவிலெ ழுந்துசென்ருள்!

காருடை போர்த்தக டலரசன் -- அவள்
கன்னிய ழகிலே காதல்கொண்டு!
பேரலை யாங்கரம் நீட்டிநின்ருன் -- அந்தப்
பெண்ணவன் போர்வையு ளொன்றிவிட்டாள்!

வாழப்பி றந்தவள் வாழவில்லை -- இந்த
வையக மோரிட மீயவில்லை,
ஏழைக்கு மரிகள் மாள்வதுதான் -- என்ருல்
ஏன்படைத் தாயடா என்னிறைவா?

(ஆனந்தசாகரம்)

---

# ஒன்றில் இரண்டு

## 1. இன்பம்

உழவன் :

வருணதேவன் மனசுவச்சான்
வானம்கொட்டுது--அண்ணே,
வரண்டுபோன வயலெவெள்ளம்
வந்துமுட்டுது !

ஒருகுறையும் இல்லையினி
ஓட்டுங்ககாளை--அண்ணே,
ஊறவச்ச விதையைத்தூவ
ஒழிஞ்சிரும் வேலை !

பலசரக்கு முதலாளி :

ஏய்முருகா, ஏய்முனியா
இப்படி வாங்க--நம்ம
இருட்டறைக்குள் சரக்கையெல்லாம்
இழுத்துப் போடுங்க !

ஓய்வில்லாத மழைக்குப்பண்டம்
ஒறுத்துப் போயிரும்--பிறகு
ஒரேநாளில் லாபம்நமக்கு
ஒன்பதாயிரம் !

## 2. துன்பம்

மண்குடிசை வாசி :

ஆண்டவனே, அஞ்சுநாளா
அடிச்சமழையிலே--எங்க
அற்பகுடிசை போனவிடம்
ஆரும் காணலே !

கூண்டுபோல இருந்துளங்க
குடும்பம் காத்திச்சு—அட,
குளறிப்போற வெள்ளங்கொண்டு
எங்க் சேத்திச்சு ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்தடிப் பாட்டி :

வாயப்பூட்டி, வயித்தக்கட்டி
வாங்கினகடலே--அதை
வறுத்தெடுத்து விற்கொணும
வந்துது தொல்லே !

பேயப்போல மழையடிச்சா
பொழப்புஇல்லேயே--ஐயோ,
பிச்சைக்கார மக்களுக்குப்
பெரிய தொல்லேயே !

(வீரகேசரி)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. பல்சுவைப் பாடல்கள்

## பத்திரிகைப் பிறவி

மாநில மீதொரு மாபிறப் பென்கிறார்
 மக்களு டம்பெடுத்தல்--அங்கு
 தக்கவு ருப்பிருத்தல்--இந்த
மேனியி லும்பெரும் மேன்மையு னதுடல்
 மேதினி யாள்பவனே--எப்
 போதிலும் வாழ்பவனே !

தேசமெ லாம்நிகழ் செய்திக ளைத்தினம்
 சொல்லிடும் வல்லவனே--பலர்
 இல்லிடம் செல்பவனே--உனை
நேசமோ டேயெதிர் பார்த்திடும் நேத்திரம்
 நித்தம்பல் கோடியடா--நீயுல
 கத்துயர் நாடியடா !

ஆலத்தி னுங்கொடி தானகு லபேதம்
 அற்றுச்ச கலருக்கும்--உனைத்
 தொட்டுஉ ணிலிருக்கும்--எழில்
கோலத்தி னுலறி வுற்றிட வைத்திடும்
 கொள்கையு னைவளர்க்கும்--தீய
 செய்கையு லகிழக்கும் !

மானுட சீவன்ம றைந்துவிட் டாலுடல்
 மண்ணொடு மண்ணாகும்--உக்கிப்
 புண்ணென வேநாறும்--நண்ப,
தேனெனச் செய்திநீ செப்பியி றப்பினும்
 தேடுவ ருன்னுடலை--அதில்
 சூழுவர் பல்பொருளை !

———

12080



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரியாத கற்பனை

கவியெழுது மாசைமிக வுண்டு; யாரோ
கற்பனையின் திறனிதற்கு வேண்டு மென்றார்;
குவிகின்ற எண்ணங்கள் குப்பை யாகிக்
குழப்பத்தைச் சிந்தையினி லூட்ட, நெஞ்சத்
தவிப்பொன்றின் வேதனையைத் தணித்துக் கொள்ளும்
தக்கதுணை கவியெழுத லென்றி ருந்தேன்;
செவியினிலே கற்பனையின் 'கூச்சல் கேட்டால்
தேர்ந்தபொருள் கற்பனைக்கு எண்ணந் தானே?

விரிகின்ற எண்ணத்தின் கிளர்ச்சி யெல்லாம்
விளைந்திட்ட அனுபவமே! வேண்டு மட்டும்
சொரிகின்ற சொல்லடுக்கு மேற்ற தாயின்
சொக்குகவி யாகுமென விருந்தேன்: ஆனால்...?
கரியநிறக் காக்கைக்குக் கால்க ளில்லை,
காவல்வரு நாய்வாலை நீட்ட லொண்ணும்
புரியாத கற்பனைதா னிவைக ளெல்லாம்
பொருளுண்டோ, உயிருண்டோ கவியிதாயின்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யார் காவல்?

உயிரோ டென்னைப் படைத்தவனே,
உலகச் சிறையுள் அடைத்தவனே,
பயிலும் வினைகள் எவர் ஏவல்?
பாரில் நீயோ என் காவல்!

காவல் மீறிப் போகின்றேன்
கயமை 'ஏதோ' புரிகின்றேன்;
ஏவல் செய்தான் நீதானோ?
இல்லை, துட்டப் பேய்தானோ?

பேய்தா னென்று சொல்வாயேல்
பின்பேன் விட்டாய் கொல்லாது?
சீச்சீ..., துட்டப் பேயோடு
சேர்த்தோ என்னைப் படைத்திட்டாய்?

படைப்புக் கொன்றும் குறைவில்லை;
பாது காக்க வேண்டாமோ?
அடைப்பாய் பேயைச் சிறையுள்ளே,
அன்றேல், அதற்கு யார்காவல்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரே, உன் பிறவி மேன்மை !

எத்தனைதான் பிறப்புக்க ளெடுத்த போதும்
இச்சகத்தில நல்லபெயர் எளிதில் வாரா ;
வித்தகரும், புத்தகங்க ளாய்ந்த பேரும்
வெள்ளிகளை, விண்ணிலவைப் பாடி யோரும்
அத்தனது பாதத்தைத் தழுவி நிற்கும்
அரும்பேற்றை அடைந்தனரோ ? மலரே, நீதான்
எத்தினமு மவனடியிற் சேர்வ தாலே
எடுத்திட்ட பிறவியிலே ஏற்றங் கொண்டாய் !

முழுமதிபோ லெழில்வதன மாதர்மேனி
முழுமைக்கு முவமான மாவாய் ; மேலும்
வளர்கின்ற சிறுபெண்ணுள் 'வயத டைந்தால்'
வருணிப்ப ருன்பெயரா லவளை ! ஆனால்
செழுமலரே, அவர்களினும் 'கன்னி' கள்தான்,
'திருமதிகள்' மட்டுந்தான் உன்னை யொப்பர் !
அழகாலும் பருவத்தின் தன்மை யாலும்
அரிவையரை யொத்ததினு லுயர்வு கொண்டாய் !

இரும்பான நெஞ்சத்தி லீவி ரக்கம்
இல்லையென்பர் ; இதனையெதிர் பார்க்கு நெஞ்சம்
விரும்புமண மலருன்னை ஒத்த தாலே
வியனுலகிற் புகழ்கொண்டாய் ! மலரே, இன்னும்
அரும்புகின்ற காதலுக்கு முன்னை யன்றே
அடையாள மாயளிப்பர் காதல் செய்வோர் ?
கரும்புமொழிக் காரிகையர் கூந்தல் தோறும்
காட்சிதரு மலரேயுன் பிறவி மேன்மை !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. தனிப்பாடல்கள்

## அவனிக்கோர் ஆறுதல்

உலகவர் பயில்வினை விலகிட நெறிவழி
உத்தம கர்த்தரவர்,
நிலவிடி னுமிது அழிவுறு முலகென
நெஞ்சில் நினைத்தவராய்,
அலகறு மரியவள் கருவினி லொருவுரு
அன்பொட ளித்திடவும்,
மலமலை களைவுற வருவுரு வெனவது
மண்ணிலு தித்ததுவே !

இனியொரு குறைவிலை எனவிறை தூதர்கள்
ஏத்திட, மண்ணிலுறு
நனிபவ நதியிடை நலிவுறு மனுகுலம்
நல்லொளி கண்டிடவே
புனிதரு மரனிறை யருள்விழி யின்மயினுள்,
புத்தியில், வல்லமையில்
'கனியெனு' மளவொரு குறையற 'மனுநெறி''
கண்டுவ ளர்ந்தனரே !

அருளுரை செயவிறை அருமக னுலகினில்
அச்சமொ ழித்தவராய்,
வருகொடு பெருவினை யெதுமனு குறினவை
வாடிவ தங்கிடவே,
''இருளிடை யுறைபவ ரினியெனு மொழிபெற
என்னுரை கேட்டிடுவீர்,
தருநெறி யுமிலொரு பவமுறை யாது
தாங்கிடும்'' என்றனரே !

திருமொழி செவிநுகர் பலரதை நாடினர்,
தீமைபொ றுத்திலதே ;
குருசெனு முருவினி லதுவர, தனதிரு
தோள்கள்கொ டுத்தவராய்,
எருசலை நகரழ, இகமழ இறையிடம்
''இவர்களை மன்னியு''மென் (று)
அருளின ரவரது பெருமையிலவனி
ஆறுதல் கண்டிடுமே ! (தினகரன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தர் இன்றிருந்தால்...!

உத்தமன் புத்தனவன்--இன்று
உலகிலே யிருந்தால்
சத்திய வாக்குப் பல--தரணிக்கு
சாற்று திருப்பானோ ?

எல்லோரு மோர் நிழற்கீழ்-நாட்டில்
ஒன்ருக வாழுமெனச்,
சொல்லியிருப்பானே--மக்கள்
துயர் களைவானே.

எண்ணிற் குறைந்த மக்கள்--இலங்கையில்
இன்னற் படுதல் கண்டு,
கண்ணீர் வடிக்கானோ-நல்லவழி
காட்டா திருப்பானோ !

ரத்த வெறி பிடித்து-வாழும்
ராட்சசர் கூட்டத்திற்கு,
இத்தரை வாழுயிர்கள்--யாவும்
இறைமய மென்றிருப்பான்.

(சுதந்திரன்)

---

பூர் வீதி இளை நூலகம்
யாழ்ப்பாண நகர சபை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வையகம் போற்றும் வரகவி நாமம்

அகில பாரத மன்னிய ராட்சியில்
அல்ல லுற்று அழுதிட்ட காலம்கார்
முகிலு றைந்தவான் வீதியெ னப்பெற
மூட நம்பிக்கை யாண்டது மக்களே !

ஆட்சியி லும்மக்கள் நெஞ்சுதொ றும்முறை
ஆகாவி ருளேய கற்றிநல் வாழ்விற்கு
மீட்சி நல்கிடு சோதியெ னப்புவி
மீது தோன்றினன் மாகவி பாரதி !

அன்னை நாட்டினர் அன்னையின் நாட்டிலே
அன்னி யன்னதி காரத்துள் வாழ்வதா ?
இன்னதி லும்மொரு வெட்கமி னியுண்டோ,
இந்தியா வேயிரு கண்கள்தி ற வென்றான் !

எல்லேத கர்த்திடு வெள்ளமெ னத்தகு
இன்த மிழ்க்கவி மாமழை யாற், பெரு
தொல்லே யுற்றிடு மக்கள்ம னத்திடை
தூண்டி விட்டான்சு தந்திர வேட்கையை !

மக்கள் வாழ்க்கையை மக்கள்ப றித்திடும்
வஞ்சகப் போக்கும டிந்திட மண்ணொடு,
திக்கெ லாமுறை மக்கள்ப டித்துமெய்
தேர்ந்திடத் தீந்தமிழ்ப் பாமழை பெய்தனன் !

ஆதியி லற்றுஅ ரையில்பு குந்தெமை
ஆட்டி வைக்கும ரக்கனெ னுங்கொடு
சாதி வேற்றுமை சாம்பலெ னப்பட
சங்கொ லித்தனன் தாரணி யெங்கணும்

"மாதரை வீட்டுள டைத்துஅ டிமையாய்
மாய்க்குமி ழிசெயல் நீக்கியி னியெனும்
காத லோடுறவாடுக" என்று பெண்
கட்சி மீண்டிடக் கானமி சைத்தனன் !

தெய்வ பக்தியில், சீரிய பண்பினில்,
தேர்ந்த கல்விய றிவில்தே சத்திற்காய்
செய்வ தில்பணி, சோரா வ ரகவி
செய்ய நாமம் தொ ழுதிடும் வையகம் !

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தவமென் செய்தாய் தமிழம்மா?

அன்னாய் தமிழே, அழகுச் சிமிழே,
என்னே தவம்நீ செய்தனையோ
தன்னே ரில்லாத் தகைசால் புலமைத்
திருவள் ளுவனைப் பெறுதற்கு?

கனிவைச் செறிவைக், கற்றோர் களைநீ
கவரும் திறனைப் பாடற்கு,
முனிவள் ளுவனுன் கருவில் தோன்ற
மூதாய், உன்தவ மென்கொல்லோ?

அழியா வுனது அமரப் புகழை,
அகத்தில் ஊற்றும் இனிமையினை
மொழியாம் தமிழிற் புலவன் அதிர
முத்தே, தவமென் செய்தனையோ?

தெய்வந் தொழலைத், திருவாம் முகிலைத்,
தீமை நீத்தார் பெருமையினை
தெய்வப் புலவன் சொல்லப் புவியில்
திருவே, தவமென் செய்தனையோ?

இல்மாட் சியினை, இனிதாம் விருந்து
இயற்றும் முறையை இகமீது
நல்லாட் சியினை—நடத்தும் முறையை
நவிலத் தவமென் செய்தனையோ?

உள்ளத் தாலே ஒன்றிக் காதல்
உறுவோர் நெஞ்சை, அவர்வாழ்வை
தெள்ளத் தெளியத் தெய்வப் புலவன்
செப்பத் தவமென் செய்தனையோ?

அமிழ்தக் குறளை அகிலத் துயிர்வாழ்
அனைவர்க் கும்மொரு மறையாக
தமிழிற் பாடித் தரணிக் கீயத்
தவமென் செய்தாய் தமிழம்மா?

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவை அனுப்பு !

இறைவனே, இதய வீட்டின் இருளினை நீக்குவோனே,
முறையிடும் தகுதி யற்றேன் முற்றிலு முனை மறந்தேன் ;
கறைசெறி வாழ்வை இன்பக் கடலெனக் கொண்டேன்; ஐயா
குறையினைக் கேட்டு எந்தன் குற்றமே நீக்குவாயே !

நிலையிலா உலக இன்பம் நிதமென மனதில் கொண்டேன்,
கலைசெறி கன்னியர்கள் கவர்ந்திட வழியும் செய்தேன்,
தொலைவுறுப் பாவச் சேற்றில் தினமெலா முழன்றேன்; இந்த
விலையிலா ஈனன் செய்த விரிபழி போக்குவாயே !

ஒளிதரு விழியி ரண்டு உவந்துநீ அளித்தாய் ; ஐயா,
துளியெனும் அதனை வாழ்வின் தூய்மையில் விட்டேனில்லை;
இழிவினை இச்சிக்கின்ற ஏந்திர மாக்கி விட்டேன்,
பழியினை நீக்கி இந்தப் பாவியை ரட்சிப்பாயே !

வாயினைத் தந்தாய் ; அங்கு வளர்ந்தது புன்மை வார்த்தை!
தூயனு முனது நாமம் துதித்திட உதவவில்லை !
மாயமா முலக இன்ப வார்த்தைகள் சொன்னேன் ; ஐயா.
நாயினும் கடையே னெந்தன் நலிவுகள் போக்குவாயே !

எடுத்திடும் பிறவி கட்குள் ஏற்றமாம் மனித பிண்டம்
கொடுத்தனை ஐயா இந்தக் கொடுஞ்செயல் புரியத்தானோ?
கடுத்திடு மெனது நெஞ்சைக் கருணைவா ரிதியே நோக்காய்!
தடுத்திடு என்னை ; இன்றேல் சாவினை அனுப்புவாயே !!

12080

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2034 C.C.



# இழிவுகள் தீர்ப்பதென்றே ?

நீர்க்குமிழி வாழ்வினை நிதமென்று நம்பியே
நெஞ்சையென் னுசைகட்கு
நீசனே னிடமீந்து நின்திருப் பாதையினை
நிமலனே, நாடிடாது,
ஈர்க்குவிழி மாதரார் ஈகின்ற இன்பமே
இதயநிறை செல்வமாக
என்னுளு மவர்போதை மொழியிலே யெனைவிட்டு
இழிவுபல வும்புரிந்தேன்
ஆர்க்குயிதைச் சொல்லிநான் அழுதழுதென் நெஞ்சினை
அழுக்குகொடு சுமைநீக்குவேன் ?
அடியார்கள் மீதெலா மருள்மழை பொழிகின்ற
அப்பனே யுன்னையல்லால்
பார்க்குமிட மெங்கணும் பரவியுள வொருசக்தி
பார்மிசையி லுண்டு கொல்லோ ?
பரலோக வாசனே பரிசுத்த நேசனே
பாவியுன் தஞ்சமையா !

எத்தனைநல் லாசிகளிவ் வீனனுக் கீந்துனது
இரக்கமன தைக்காட்டினாய்
எள்ளளவு மிவைகளையெ னிதயத்தி லுணராது
இறவாத பழிகள்செய்து
பித்தனு யுலகின்பப் பேயனவன் காட்டிட்ட
பேரிருட் பாதையூடு
பின்னடந் திருகாலு மிடறிவீழ்ந் துடலெலாம்
பீறிடக் குருதிபாய்ந்தும்
சித்தத்தை மீண்டுமங் கடகுவைத் துன்னையுதா
சீனம்பு ரிந்துவிட்டேன் ;
சேவிக்கு மடியார்கள் சிந்தையினி லுறைகின்ற
தேவனே யுன்னையல்லால்
இத்தரணி மீதருளை யீயவரு மொருசக்தி
எந்தனுக் குண்டுகொல்லோ ?
ஈசனே, எனையீன்ற நேசனே நான்செய்த
இழிவுகள் தீர்ப்பதென்றே ?

(உதயதாரகை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது மகள் உங்களுக்கே !

பட்சமிகு மருமகனார் அவர்களுக்குப்
பலகோடி வணக்கங்கள் உரித்தா கட்டும் !
நிச்சயமா யிக்கடித முங்க ளுக்கு
நீண்டபெரு மாச்சரியம் தரவே செய்யும் !
உச்சிமிசை வான்வீழ்ந்த போதும், கொண்ட
உறுதிதள ராவுங்கள் திறமை கண்டு
தற்சமய மென்னெண்ணம் மாற்றிக் கொண்டேன் ;
தடையில்லை ; எனதுமக ளுங்களுக்கே !

எத்தனைதான் தடைகளைநான் விதித்த போதும்
என்மகளில் கொண்டவுயர் காத லாலே
அத்தனையுந் தூசாக நினைத்து, மேலாம்
ஆவியுட லைக்கூட மதித்தி டாது
செத்தாலு மவளோடே சாவ தென்ற
தீர்ப்போடு மதிலேறிக் குதித்துக், கைகால்
சொத்தையுடை பட்டதனை மறந்து போங்கள் ;
துயர்தந்த எனையுந்தான் மன்னியுங்கள் !

பரிதாப நிலையிலுழல் மகளின் வாழ்வைப்
பாழ் செய்யேன், அவள்-படிக்கும் போது, காதல்
அரிவையரென் றுலகின்று போற்றுகின்ற
அனார்க்கலியை, லைலாவை, ஜூலியற்றைச்
சரியாகப் படித்திருப்பாள் ; சாவ தற்குந்
தயங்குவாளோ ? ஆகையினால், புதிதாய்க், காதல்
சரித்திரமொன் றுருவாக வேண்டாம் ! உங்கள்
சம்மதத்தைத் தாருங்கள் ! -- அன்பு மாமா.

12080



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
12080
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜீவா–ஜீவரத்தினம்



(23-11-1939)

தமிழ்க்கலை வளரும் கிழக்கிலங்கையின் தென்பகுதியிலுள்ள துறைநீலாவணை காத்தமுத்து ஆசிரியரின் புதல்வர் ஜீவா. – ஜீவரத்தினம்.

விவேகி, தினகரன், வீரகேசரி, உதயதாரகை, கலைச்செல்வி, ஆனந்தசாகரம். சுதந்திரன் முதலிய இதழ்களில் உயிர்த்துடிப்புள்ள கவிதைகள் தருகின்ற இவர் நல்லூர் ஆசிரிய கலாசாலையில் பயிற்றப்பட்ட ஒரு தமிழ் ஆசிரியர். இன்று தென்னமரவாடி அரசினர் பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றும் இவர் நல்ல பேச்சாளராவர்.

கல்முனை இலக்கியப் பேரவையின் செயலாளராகி கவிதைப் போட்டி ஒன்றை நடத்தக் காரணமாக இருந்தார். இலக்கிய முயற்சிகளை ஊக்குவித் துழைக்கும் இவ்விளங் கவிஞர் அண்மையில் முத்தமிழ் விழா ஒன்றைச் சிறம்பட நடத்த முயன்று வருகின்றார்.

விலை சதம் -/75

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org